10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

கு ... வெள்ளிக்கிழமை ஜனவரி 26 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## கோத்தா கைதுக்கான தடை மீண்டும் நீடிப்பு

கொழும்பு, ஜன. 26

கோத்தபாய ராஜபக்சவை கைது செய்வதற்கான தடை உத்தரவை மீண்டும் நீடித்துள்ளது நீதிமன்றம்.

டி.ஏ.ராஜபக்ச அருங்காட்சியக நிர்மாணத்தின்போது நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது எனக்கூறி பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

06▶

## வர்த்தகக் கண்காட்சி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி மாநகர சபை மைதானத்தில் இன்று காலை ஆரம்பமாகி வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

யாழ். வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக்கண்காட்சியில் உள்நாடு, சர்வதேச நாடுகளைச் சேர்ந்த சுமார் 300 நிறுவனங்களும் 75 துணை நிறுவனங்களும் பங்கேற்

06▶



## மாணவியின் மரணத்துக்கு மாகாண சபையே காரணம்

### கடற்படைக்காக டக்ளஸ் வக்காளத்து

யாழ்ப்பாணம், ஜன.26

புங்குடுதீவு பாடசாலை மாணவி கேசனாவின் சாவுக்கு வடக்கு மாகாண சபையின் செயலற்ற தன்மையே காரணம் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

"பவள் கவச வாகனத்தால் அடித்து இழுத்துச்செல்லப்பட்ட மாணவி உடனடியாக முதலுதவி சிகிச்சைக்காக புங்குடுதீவு ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அந்த வைத்தியசாலையில் வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் தான் குறித்த சிறுமி உயிரிழந்துள்ளார் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு வடக்கு மாகாண சபையின்

06▶

# சிங்களக் குடியேற்றம் உடன் நிறுத்துங்கள்

### வடக்கு உறுப்பினர்கள் சபையில்

## கோபாவேசம்




யாழ்ப்பாணம், ஜனவரி 26

வடக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள், காணி அபகரிப்பு – ஆக்கிரமிப்பை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என வட மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். அத்துடன் இது தொடர்பாக உடனடியாக தீர்மானம் நிறைவேற்றி, அதனை ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு மாகாண சபையின் 116 ஆவது அமர்வு கைதடியில் பேரவை செயலக சபா மண்டபத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில்

06▶

## வடக்கு சபையில் இரு புதுமுகங்கள்

யாழ்ப்பாணம்; ஜன. 26

வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினர்களாக சபாரத்தினம் குகதாஸ், அப்துல் நியாஸ் சீனி முஹகமட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வட மாகாண சபையின் தமிழ் அரசுக் கட்சி

06▶

## சம்பந்தன் விசேட உரை நாளை பரந்தனில்

யாழ்ப்பாணம், ஜன 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொள்ளும் விசேட பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பரந்தனில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, தமிழ் மக்களின் எதிர்கால அரசியல்

06▶

## பாதக நிலை உருவானால் தேர்தல் இரத்தாகும்

கொழும்பு, ஜன. 26

நாட்டில் அசாதாரண நிலை ஏற்பட்டால் உள்ளூராட்சித் தேர்தல் இரத்துச் செய்யப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாகியுள்ள நிலையில் தேர்தலை நடத்த முடியாத அளவுக்கு பாதகமான சம்பவங்கள் ஏற்பட்டால் தேர்தல் இரத்துச் செய்யப்படும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான இறுதி நாள் இன்றாகும். இதனைத் தவற விடுவோர் பெப்ரவரி முதலாம், 2 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் எனவும் கூறினார். (ச)

## வட மாகாண அரசை ஒதுக்கி கபடமாக செயற்படுகிறது மத்தி

### சபையில் முதலமைச்சர் காட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 26

மத்திய அரசு தான் நினைத்தவாறு உள்நோக்கத்துடனேயே வடக்கில் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. எம்முடன் கலந்து பேசிச் செயற்படுங்கள் என்று மத்திய அரசை நாங்கள் தொடர்ந்து கோரி வருகிறோம். ஆனால் மத்தி எம்மைப் புறந்தள்ளியே தொடர்ந்தும் செயற்படுகின்றது.

இவ்வாறு நேற்று வடக்கு மாகாண சபையில் சீற்றத்துடன் கருத்து வெளி

06▶

## கடற்படைக்கு எதிராக மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26

பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்து முகாம் அமைத்துள்ள கடற்படையினரை வெளியேறுமாறு ஊர்காவற்றுறை மக்கள் போராட்டம் நடத்தினர்.

ஊர்காவற்துறை கடற்படை முகாமுக்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் ஒன்று திரண்ட காணி உரிமையாளர்கள், காணிகளிலிருந்து கடற்படையினரை வெளியேறுமாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் தமது காணிகளைச் சுவீகரிப்பதை உடன் நிறுத்தவேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

நண்பகல் 12 மணிவரை நீடித்த போராட்டத்தில் பாதிக்கப்பட்ட

06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# “மகிந்த அணியினர் ஐ.தே.க.வுக்கு தாவுவர்”

**கே:** பிணை முறி விவகாரத்தில் பிரதமர் பொறுப்புக் கூற முடியாது. அவர் சம்பந்தப்படவில்லை என்று அமைச்சர் பைஸர் முஸ்தபாவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவும் கூறுகின்றனர். இது சுதந்திரக் கட்சியின் உத்தியோக பூர்வநிலைப்பாடா?

**ப:** இல்லை. சுதந்திரக் கட்சியின் மத்திய குழு முடிவெடுததால் மாத்திரம்தான் சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்று ஏற்க முடியும். மத்திய குழுவில் இது இன்னும் பேசப்படவில்லை.இதனால் இவர்களின் கூற்றுக்களை எமது கட்சியின் உத்தியோக பூர்வ நிலைப்பாடாக ஏற்க முடியாது.

இந்தப் பிரச்சினையை மூடி மறைக்க முடியாது. அவ்வாறு செய்தால் இதற்கு எதிராக மக்கள் நீதிமன்றம் செல்லும் நிலையில் உள்ளனர். பிணை முறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் உள்ள விடயங்களை பார்க்கும்போது இந்த மோசடிக்கு எதிராக பல்வேறு தரப்பினர் நீதிமன்றம் செல்லும் நிலைதான் உள்ளது. ஏனென்றால் இது பாரிய நிதி மோசடி என்பதாலாகும்.

இந்த மோசடியுடன் தொடர்புபட்டவர்கள் யார்? அவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது மிகத் தெளிவாகும்.எம்மால் இதை மறைக்க முடியாது. சாக்குப்போக்குகள் கூறி சம்மந்தப்பட்டவர்களால் நழுவமுடியாது. அரசு இதை மூடி மறைப்பதற்குத் தயாரில்லை என்பதை ஜனாதிபதி அவரது விசேட கூற்றின் ஊடாகக் கூறிவிட்டார்.



**கே:** பிணை முறியால் ஏற்பட்ட 1145 கோடி ரூபா நட்டம் என்பது முழுவதுமான நட்டமா அல்லது குறிப்பிட்ட காலப்பகுதியில் மாத்திரம் ஏற்பட்ட நட்டமா?

**ப:** நாம் 2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரை இடம்பெற்ற பிணைமுறி வழங்கல் செயற்பாட்டையே கவனத்தில் எடுத்துள்ளோம். இது தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை என்ன கூறுகிறதோ அதன் அடிப்படையில்தான் முடிவெடுக்க வேண்டும்.

**கே:** தேசிய அரசின் ஒப்பந்தம் முடிந்துவிட்டது. இப்போது இருப்பதுசெல்லுபடியற்ற தேசிய அரசு அல்லவா. இது தொடர்பில் என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்?

**ப:** 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் ஒப்பந்தம் முடிந்துவிட்டது. இது தேர்தல் காலமாக இருப்பதால் தேர்தல் முடிந்ததும் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது என்று சுதந்திரக் கட்சியின் மத்திய குழு முடிவெடுத்துள்ளது. ஒப்பந்தம் முடிவடைந்துள்ள போதிலும், இப்போது இருப்பதுதேசிய அரசுதான்.

**கே:** இப்போது முடிவெடுத்தால் உங்களது வாக்குப் பெட்டிக்குப் பாதிப்பு ஏற்படும் அல்லவா?

**ப:** அப்படி இல்லை.இந்த நேரத்தில் அரசை விட்டு வெளியே சென்றால் நல்லதுதான். இருந்தாலும்,தேசிய அரசை பலப்படுத்தும் வகையில் பல விடயங்கள்பேச வேண்டியுள்ளன. இது தொடர்பில் எமது அமைச்சர்களிடம் பல யோசனைகளை உள்ளன. தொண்டு கட்சிகளும் பேசி ஒரு முடிவை எடுக்கும்.

**கே:** உங்களது நிலைப்பாடு என்ன?தேசிய அரசு இருக்க வேண்டுமா? அல்லது கலைக்கப்பட வேண்டுமா?

**ப:** முதலில் எமது கட்சி பலப்படுத்தப்பட வேண்டும். நாம் தேசிய அரசில்இருந்து விலகினால் ஐக்கிய தேசிய கட்சி தனித்து ஆட்சி அமைக்கும். இதற்கு நாம் இடங்கொடுக்கமாட்டோம். நாம் விலகினால் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கு மகிந்த தரப்பில் இருந்து 11 பேர் தயாராக இருக்கின்றனர் என்று அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

அவர்களின் பெயர்களைக்கூட ஹரிசன் கூறியிருந்தார். அவர்களில் ஒருவரான கெஹலிய ரம்புக்வல அதை மறுத்திருந்தாலும் கூட ஐக்கிய தேசிய கட்சியை விரும்புவதாகக் கூறி இருந்தார்.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து ஆட்சி அமைப்பதற்கு எந்தக் கட்சிக்கும் மக்கள் ஆணை வழங்கவில்லை. ஐக்கிய தேசிய கட்சிக்கு 106 ஆசனங்களும் சுதந்திரக் கட்சிக்கு 95 ஆசனங்களும் ஜேவிபிக்கு 06 ஆசனங்களும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு 16 ஆசனங்களும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துக்கேட்டு ஓர் ஆசனமும் கிடைத்தன. ஆட்சி அமைப்பதற்குத் தேவையான 13 ஆசனங்கள் எந்தக் கட்சிக்கும் கிடைக்கவில்லை. 113 ஐ அடைவதற்கு 7 ஆசனங்கள் ஐக்கிய தேசிய கட்சிக்குத் தேவை. நாம் 113 ஐ அடைவதற்கு 17 ஆசனங்கள் தேவை.

நாம் தேசிய அரசை விட்டு வெளியே வந்து தனித்து ஆட்சி அமைப்பதென்றால் 17 ஆசனங்களைத் தேட வேண்டும். இந்த எண்ணிக்கையை எங்கிருந்து எடுப்பது என்ற கேள்வி எழுகின்றது. நாம் தனித்து ஆட்சி அமைப்பதென்றால் முதலில் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சக்திமிக்க மக்கள் ஆணையைத் திரட்ட வேண்டும் வெற்றி பெற வேண்டும்.

உண்மையில் நாங்கள் இப்போது தோல்வியடைந்த நிலையில்தான் உள்ளோம். 2015 ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் நாம் தோல்வியடைந்தோம். இதனால் திட்டமிட்ட அடிப்படையில் கட்சியை வெற்றிபெற வைப்பதற்கான தேவையுடன் நாம் இருக்கின்றோம்.

இந்த நிலையில்,நாம் தேசிய அரசை விட்டு வெளியேறினால் எங்களது ஆட்களே ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து அக்கட்சி தனித்து ஆட்சி அமைக்க உதவுவர். ஆகவே,மறுபுறம் கட்சியைப் பலப்படுத்திக்கொண்டு 2020 வரை தேசிய அரசோடு போவதுதான் சிறந்தது.

**கே:** ஆனால்,சுதந்திரக் கட்சியை இரண்டாக உடைத்தது ரணில்தான் என்று ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள் கூறுகின்றார்களே?

**ப:** மகிந்த தரப்பில் மொட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்கவுள்ள மக்கள் இதைக் கவனத்தில் எடுத்து சுதந்திரக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். இதேபோல் 1981 இலும் பசில் ராஜபக்ஸ போன்றவர்களால் சுதந்திரக் கட்சி இரண்டாக பிளக்கப்பட்டது. இதனால் 82 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி தோல்வியைச் சந்தித்தது.

சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகக் களமிறங்கிய கொப்பேகடுவவை தோற்கடிப்பதற்காக அனுரபண்டாரநாயக நாடு பூராகவும் சென்று பிரசாரம் செய்தார். இப்போது மகிந்த அணி மைத்திரிக்கு எதிராக பிரசாரம் செய்வதுபோல். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் கட்சியில் வந்து இணைந்தனர்.

1987 இல் சந்திரிகா தலைமையிலான குழுவினர் கட்சியை மீண்டும் பிளவுபடுத்தினர். இதனால் 88 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி தோல்வியடைந்தது. இதேவேலையைத்தான் இப்போது மஹிந்த தரப்பினரும் செய்கின்றனர்.

ஐக்கிய தேசிய கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கு அப்போது மஹிந்த ஆதரவு வழங்கினார்.கட்சிக்குள் பிரச்சினை ஏற்பட்டது.ஐக்கிய தேசிய கட்சியின் 40 பேர் மஹிந்தவுடன் இணைந்திருந்தனர். இப்போது ரணில் மஹிந்தவைக் கொண்டு சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி வருகின்றார். மகிந்த தரப்பின் புதிய கட்சியும் ரணிலின் மூளையால்தான் உருவாக்கப்பட்டது.

சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் இதைக் கவனத்தில் எடுத்து சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும்.மகிந்த தரப்பையும் மைத்திரி தரப்பையும் ஒன்றிணைத்தே நாம் பயணிக்க விரும்புகிறோம். நாம் போட்டியிடுவது ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராகவே அன்றி மகிந்த தரப்புக்கு எதிராக அல்ல.

**‘எதிரொலிக்கு’ வழங்கிய செவ்வியில் அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆரூடம்**

சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதில் மைத்திரிபால அதிக கவனம் செலுத்தியுள்ளார். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் எமது எம்பிக்கள் அனைவரையும் ஒன்று கூட்டிய மைத்திரி கட்சியைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தே தேசிய அரசை அமைக்கப் போவதாகக் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சி ஒரு சிலரைக் கழற்றி எடுத்து தனி அரசை அமைப்பதற்கு முயற்சி செய்கின்றது என்றும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் எம்மிடம் கூறினார்.எல்லோருக்கும் அமைச்சுப் பதவிகள் கொடுக்க முடியாது. சிலர் அமைச்சர்களாகவும் சிலர் எதிர்கட்சியிலும் இருங்கள் என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

குமார வெல்கமவைத் தவிர அனைவரும் இதற்கு உடன்பட்டனர்.ஆனால், எதிர்க்கட்சியில் அமர்ந்துகொண்டவர்கள் இப்போது அந்தத் தீர்மானத்தை எடுக்கின்றனர்.தனிக்கட்சி ஒன்றை உருவாக்கி செயற்படுமாறு மைத்திரி கூறவில்லை.

இன்று சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்தும் வகையில் பசில் ராஜபக்ச செயற்படுகின்றார்.அன்றும் அவர் இதே வேலையைத்தான் செய்தார். இன்றும் அதே வேலையைத்தான் செகின்றார்.ஐக்கிய தேசிய கட்சியின் தேவையை அன்று நிறைவேற்றியதுபோல் இன்று நிறைவேற்றிக் கொண்டு செல்கின்றார் பசில்.

பசில் இலங்கை பிரஜையும் இல்லை. அமெரிக்க பிரஜை. அப்படிப்பட்ட இவர் இலங்கை வந்து புதிய கட்சியை உருவாக்கி ஐக்கிய தேசிய கட்சியின் திட்டத்தின்படி சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்திக் கொண்டு செல்கின்றார்.

ஜீ.எல்.பீரிஸ் அந்தக் கட்சியின் தலைவராக இருந்து அவரது பெயரைக் கெடுத்துக் கொண்டார்.அடுத்தவர்களின் குப்பையை இவர் சுமந்து இவரது பெயரை நாரடிக்கின்றார். மிகச் சிறந்த புத்திஜீவியான இவர் மஹிந்த ஆட்களுடன் சேர்ந்து சீரழிகின்றார்.இந்தக் கட்சிக்கு உண்மையான தலைவர் யாரென்றே தெரியாது.

அப்படியான கட்சியை மக்கள் ஆதரித்து சுதந்திரக் கட்சியை சீரழிக்கக்கூடாது. ஐக்கிய தேசிய கட்சியின் திட்டம் வெற்றி பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடாது.

**கே:** அப்படியென்றால் 42 எம்பிக்களை மாத்திரம் கொண்டிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருக்கு பிரதமர் பதவி கொடுத்தது, அவருடன் இணைந்து தேசிய அரசை உருவாக்கியது, ஐக்கிய தேசிய கட்சியின் மாநாட்டுக்குச் சென்று வாழ்த்துத் தெரிவித்தது போன்ற வேலைகளை செய்தது மைத்திரிதானே. மஹிந்த தரப்பைச் சேர்ந்த எவரும் இவ்வாறு நடந்துகொள்ளவில்லையே?

**ப:** அப்போது ரணிலுக்கு பிரதமர் பதவி கொடுக்கும் போதே மஹிந்த தரப்பினர் இதற்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கலாம் தானே. 42 பேரை மாத்திரம் வைத்திருந்தவருக்கு பிரதமர் பதவி கொடுத்தது ஓர் இராஜதந்திரமாகும்.

மைத்திரிபால ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மறுநாள் நாடாளுமன்றத்தைக் கலைத்திருந்தால் சுதந்திரக் கட்சிக்கு 40 ஆசனங்கள்தான் கிடைத்திருக்கும். ஐக்கிய தேசிய கட்சி தனித்து ஆட்சி அமைத்திருக்கும். அப்போது ஐக்கிய தேசிய கட்சி அதிக மக்கள் ஆதரவைப் பெற்றிருந்தது.

அதுமட்டுமல்ல, உள்ளூராட்சி சபைகளைக்கூட மைத்திரிபால அப்போதே கலைத்திருந்தால் அனைத்து சபைகளையும் ஐக்கிய தேசிய கட்சியே கைப்பற்றி இருக்கும். ஜனாதிபதி நாடாளுமன்றத் தேர்தலையும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் இழுத்தடித்ததால்தான் சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க முடிந்தது. 95 ஆசனங்களையேனும் கைப்பற்ற முடிந்தது.

**கே:** மைத்திரி தரப்பையும் மஹிந்த தரப்பையும் ஒன்றிணைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோற்றுப்போகக்,காரணம் மஹிந்த தரப்பு முன்வைத்த நிபந்தனைகளை மைத்திரி தரப்பு ஏற்காமைதான் என்று சொல்லப்படுகிறது.அமைச்சுப் பதவிகளைக் கைவிட்டுவிட்டு வருமாறு மஹிந்த கூறுகிறார். ஏன் நீங்கள் இந்த நிபந்தனையை ஏற்கவில்லை?

**ப:** மஹிந்த கூறுவதுபோல் நாங்கள் அரசில் இருந்து வெளியேறினால் மைத்திரியைத் தலைவராக ஏற்று மஹிந்த எம்முடன் இணைவாரா? அப்படி இணைவார் என்றால் நாம் அரசை விட்டு வெளியேறுவதாக இரத்தத்தால் கையெழுத்திட்டு உறுதிப்படுத்துவோம். ஆனால்,அது ஒருபோதும் நடக்காது.மஹிந்த மைத்திரியை ஏற்கமாட்டார். மக்களை ஏமாற்றுவதற்காக இப்படிக் கூறி வருகின்றார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி Ethiroli

வெள்ளி, 26 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

# வேண்டுமொரு நல்ல வைத்தியசாலை

வித்தியாவுக்குப் பின்னர் புங்குடுதீவின் பக்கம் இன்னொரு மாணவியின் மரணம் கவனத்தைத் திருப்ப வைத்துள்ளது. தரம் 4 இல் கற்கும் கேஷானி என்ற இந்த மாணவி, கடற்படையின் பவள் கவச வாகனத்துடன் மோதுண்டதில் உயிரிழந்திருந்தார். ஆனால் அவரது உயிரிழப்புக்கு தனியே பவள் கவச வாகனம் மட்டும் காரணமல்ல, இன்னொரு காரணமும் இருக்கிறது என்ற உண்மை பலரையும் அதிர்ச்சிக்குள் தள்ளியுள்ளது.

குறித்த மாணவி விபத்தில் சிக்குண்டு, புங்குடுதீவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது , அங்கு உரிய வைத்தியர்கள் இன்மையால், பின்னர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவள் கொண்டு செல்லப்பட்டாள். ஆனால் அவளைக் காப்பாற்ற முடியவில்லை. ஒருவேளை, புங்குடுதீவில் வைத்தியர்கள் இருந்திருந்து, கேஷானிக்குத் தேவையான சிகிச்சையை வழங்கியிருந்தால், அவள் உயிரோடு இருந்திருப்பாள். வைத்தியசாலை என்ற பெயருக்கு ஒரு கட்டடத்தைக் கட்டிவிட்டால் மட்டும் போதாது. உரிய ஆளணியையும் ஏனைய வளங்களையும் வழங்கினால் மாத்திரமே அது உயிர்ப்போடு இருக்கும். அத்தோடு அந்தப் பகுதி மக்களின் உயிரையும் காக்கும் வல்லமையோடு விளங்கும். ஆனால் இங்கு அப்படியான நிலைஇல்லை.

குறிப்பாகத் தீவகத்தில் மருத்துவத்துறை இன்னமும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து சுமார் 25 கிலோ மீற்றர்களுக்கப்பால் இருக்கும் இந்தப் பகுதி மக்கள் , காய்ச்சல், தலையிடி, சாதாரண காயங்களுக்கு மருந்து கட்டுதல் என்பவற்றுக்கே அந்தப் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்கிறார்கள். ஆனால் பரிதாபம் என்னவென்றால், ஒப்பீட்டளவில், யாழ்ப்பாணத்தில் அதிகளவில் மருத்துவ உதவி இப்படிப்பட்ட தீவக மக்களுக்கே தேவைப்படுகின்றது. புவியியல் அமைப்பு, காலநிலை, வாழ்க்கை முறைமை, தொழில் முயற்சிகள் என்பன அத்தகைய நிலையை உண்டாக்கி விடுகின்றன. இருப்பினும் அப்படி அதிகளவான மருத்துவ உதவி தேவைப்படும் பிரதேசத்தில் உருப்படியான ஒரு வைத்தியசாலை கூடக் கிடையாது. அரச வைத்தியசாலைகள் தான் இல்லை, சகல வசதிகளும் கொண்ட தனியார் வைத்தியசாலைகள் தன்னும் அங்கில்லை. யாழ்.நகரெங்கும் சந்திக்குச் சந்தி மாடிக்கட்டடங்களுடன், தினமும் முளைக்கும் தனியார் வைத்தியசாலைகள், அரச வைத்தியசாலைகளுக்கே சவால் விடும் வகையில் அதி நவீன வசதிகளுடனும், நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களுடன் காசு பண்ணுவதை மட்டுமே குறியாகக் கொண்டுள்ளன. அதனால் தான் அவை உண்மையான மருத்துவ உதவி தேவைப்படும் தீவகம் போன்ற பகுதிகளை விடுத்து, நகரப்பகுதியை மட்டும் இலக்காகக் கொண்டு உருப்பெறுகின்றன.

அரசாலும், தனியாராலும் கைவிடப்பட்ட மருத்துவச் சூழலே இங்கு நிலவுகின்றது. அண்மையில் நெடுந்தீவுக்குப் பயணமான வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், அங்கு வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை, வசதியீனம் என்பவற்றைப் பார்த்து அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்தார். ஆனால் அப்படிச் சொன்னதோடு சரி, பின்னர் அந்த வைத்தியசாலை பற்றி அவர் மறந்தே விட்டார். இப்போது கேஷானியின் மரணம், தீவக வைத்தியசாலைகளின் செயல்திறன் எந்தளவில் உள்ளன என்பதைக் காட்டியுள்ளன.

உண்மையில் தீவகத்துக்கென, சகல வசதிகளும் , தேவையான ஆளணியும் கொண்ட ஒரு ஆதார வைத்தியசாலையாவது அமைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் பல கேஷானிகளையும், அவர்களின் சாவுகளையும் கண்டுகொண்டே இருக்கவேண்டியிருக்கும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பதுங்கு குழிக்குள் கொள்ளைக் கும்பல்

யாழ்ப்பாணம், ஜன.26

தென்மராட்சி தெற்கு ,மறவன்புலவில் பதுங்கு குழியினுள் மறைந்திருந்த கொள்ளைக் கும்பல் ஒன்றை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கேரதீவு முதன்மை வீதியிலிருந்து ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் சென்றதனை சிவில் உடையில் நின்ற பொலிஸ் அலுவலர் ஒருவர் கண்டு, அவரைப் பின் தொடர்ந்து சென்றுள்ளார். அப்போது குறித்த நபர் பதுங்கு குழி ஒன்றுக்குள் செல்வதையும், அங்கு மேலும் பலர் இருப்பதையும் அவர் கண்டுள்ளார். இதையடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. உடனடியாகக் குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸாரைக் கண்டதும் பதுங்கு குழியில் இருந்த 5 பேரும் தப்பி ஓடியுள்ளனர். இவர்களைத் துரத்திச்சென்றபோது இருவர் கைது செய்யப்பட்டதுடன், மூவர் தப்பி ஓடியுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நாவற்குழி மற்றும் அளவெட்டியைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களைப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்னிலைப் படுத்தினர். இதன்போது ,கைது செய்யப்பட்டவர்களைப் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து, 3 வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணம் மற்றும் இரண்டரைப் பவுண் நகை என்பன மீட்கப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக வடக்கில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்கள் தொடர்புபட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

# இந்தோனேசிய ஜனாதிபதியுடன் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு



கொழும்பு,ஜன.26

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில், இடம்பெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தையின் போது வர்த்தக முதலீடுகளை மேம்படுத்துவது பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக வர்த்தகம், முதலீடு, பொருளாதார ஒத்துழைப்பு, விஞ்ஞான தொழில்நுட்பம் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(அ)

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் வவுனியாவில் ஞாயிறு வெளியீடு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வவுனியாவில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

வவுனியாவில் நடைபெறவுள்ள தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் வெளியிட்டு வைக்கவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் கைது

கொழும்பு, ஜன.26

ஜனாதிபதி அலுவலகத்தின் முன்னாள் மேலதிக செயலாளர் மற்றும் கணக்காளர் ஆகியோர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு வாகனக் கொள்வனவின் போது இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பான மேலதிக தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (அ)

# போலி வாக்குச் சீட்டுடன் கூட்டமைப்பு வேட்பாளர் பரந்தனில் கைது

கிளிநொச்சி, ஜன 26

போலி வாக்குச் சீட்டுடன் கிளிநொச்சியில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர் ஒருவர் தேர்தல் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரைச்சிப் பிரதேச சபைக்கு பரந்தன் வட்டாரத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான கிருஸ்வேணி விக்ரர் லோகநாதன் (விக்ரர் சாந்தி) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

பரந்தன் பகுதியில் சட்டவிரோதமாக வியாபார நிலையம் ஒன்றை அலுவலகமாகப் பயன்படுத்தியமை மற்றும் போலி மாதிரி வாக்கு சீட்டுக்களை வைத்திருந்தமை போன்ற காரணங்களால் கைது செய்யப்பட்ட குறித்த பெண் வேட்பாளர் விசாரணைகளுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டார் . அத்தோடு அவரிடம் இருந்த போலி வாக்குச் சீட்டுகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. (அ)

# 8 இந்திய மீனவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.26

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 8 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர் கைதானோரின் மீன்பிடி படகும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களும், மீன்பிடிப் படகும் யாழ். நீரியல் வளத்துறைப் பணிப்பாளர் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள் ள்னர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

# பல்கலைக்கழக மாணவர்கள் 13 பேருக்கும் நீதிமன்று பிணை

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவபீட 3ஆம் வருட சிங்கள மாணவர்கள் 13 பேரும் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரனால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 18ஆம் திகதி இரவு, யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 4ஆம் வருட மாணவர்களுக்கும் 3 ஆம் வருட மாணவர்களுக்கும் இடையில் கைகலப்பு இடம்பெற்றது.

விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் 3 ஆம் வருட மாணவர்கள் 4 பேரை கைது செய்து யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். தன்போது, 4 பேரையும் எதிர வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடந்த திங்கட் கிழமை நீதிவான் உத்தரவிட்டிருந் தார்.

இந்நிலையில், கைகலப்புடன் தொடர்புடைய 3ஆம் வருட மாணவர்கள் 9 பேர் நேற்றுமுன்தினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

விளக்கமறியலில் இருந்த 13 மாணவர்களும் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது, 13 மாணவர்களையும் நிபந்தனையுடனான பிணையில் விடுவித்தார் நீதவான். (ச)

## இன்று நாளும் கோளும்

26.01.2018 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 13 ஆம் நாள்

நவமி மு.ப 09.12 — கார்த்திகை 02.22 வரை — மரணயோகம்

இராகுகாலம் 10.30 - 12.00 — சுபநேரம் மு.ப. 09.30 - 10.30 — எமகண்டம் பி.ப. 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிரமம் | நன்மை | இலாபம் | செலவு | தடங்கல் | தாமதம் | தனம் | திறமை | விவேகம் | ஆர்வம் | இரக்கம் | பயம் |

# 113 நிலையங்களில் கிளிநொச்சியில் வாக்களிப்பு




கிளிநொச்சி, ஜன.26


கிளிநொச்சி மாவட்டத்தில் 113 தபால் மூலம் வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது என கிளிநொச்சி மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ. அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2018க்கான தபால் மூலம் வாக்களிப்பு கிளிநொச்சியிலும் நேற்று இடம்பெற்றது. இதில் 17159 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதிப் பெற்றிருந்தனர்.

ஏற்கனவே 12 நிலையங்களில் தபால் மூலம் வாக்களிப்பு இடம்பெற்றுள்ள நிலையங்களில் நேற்று 101 நிலையங்களில் வாக்களிப்பு இடம் பெற்றுள்ளது.

அலுவலக நேரத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியும் எனவும் இன்றும் வாக்களிக்கலாம் என்பதோடு இந்த இரு தினங்களிலும் வாக்களிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் முதலாம் திகதி மாவட்ட உதவித் தேர்தல் அலுவலகத்துக்கு சமுகமளித்து வாக்களிக்க முடியும் எனவும் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமலராஜ் தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சிக் கூட்டத்தில் சம்பந்தன்



கிளிநொச்சி, ஜன.26

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் விடயங்கள் குறித்து விளக்குவதற்கான பொதுக்கூட்டம் கிளிநொச்சி பரந்தன் பொதுச்சந்தை வளாகத்தில் நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடை பெறவுள்ளது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் த.குருகுலராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார். அத்துடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உட்பட கூட்டமைப்பு கட்சிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து உரையாற்றவுள்ளனர். (அ)

# அரச பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் உயர்வு

கொழும்பு, ஜன.26

அனைத்து அரசாங்க ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கு 22 வீதம் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின் கீழ் 2006ஆம் ஆண்டில் இருந்து 10 வருடங்களுக்குள் எவ்வித சம்பள அதிகரிப்பும் மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் சமகால அரசாங்கத்தின் கீழ் 2015ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் தொழிலாளர் சேவை 7512 ரூபாவாலும், அமைச்சின் செயலாளருக்கு 30684 ரூபாவாலும் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமது தொழிற்சங்க முன்னணியின் கோரிக்கைக்கமைய 2015 ஆம் ஆண்டு சம்பளத்துடன் இணைப்பட்ட 10000 ரூபா கொடுப்பனவு மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சம்பளத்தில் 20 வீத கொடுப்பனவும் அடிப்படை சம்பளத்துடன் இணைக்க சமகால அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய செயற்படுவதாகவும் தொழிற்சங்க முன்னணியின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்பட்டமையினால் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற மேலதிக கொடுப்பனவுகள், வாராந்த ஓய்வுக் கொடுப்பனவு மற்றும் அரச விடுமுறை கொடுப்பனவு என்பனவும் அதிகரிக்கப்படவுள்ளன. (அ)

# சீராக்குவார் யாரோ?

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்ப்பாணத்தில் பண்ணை தனியார் பஸ் நிலையத்துக்கருகில் அமைந்துள்ள பொது மலசலகூடம் துர்நாற்றம் வீசுவதோடு, சாராயப் போத்தல்கள், சோடா போத்தல்கள் என்பவற்றாலும் நிரம்பிய நிலையில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அதனால் பயணிகளும், சாரதிகளும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். எனவே உரியவர்கள் குறித்த பொது மலசல கூடத்தை சீராக்கித் தரவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-11)



# டிஜிட்டல் வரைபடத்துடன் கிராமங்களின் அட்டவணை

கொழும்பு, ஜன.26

புதிய தகவல்களை உள்ளடக்கி இலங்கையின் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் தொடர்பான கிராமங்களின் அட்டவணையைத் தயாரிப்பதற்கு அரச நிலஅளவையாளர் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த காலப் பகுதியில் கிராமம், நகரம் மற்றும் வீதிகள் என்பன புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இவை அரசாங்கத்தினால் வர்த்தக மானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான இடங்களின் பெயர், பூகோள ரீதியிலான அறிகுறிகள் குறித்த குறியீடுகள் கொண்டதாக புதிய கிராம உத்தியோகத்தர் பெயர்ப்பட்டியில் அட்டவணை தயாரிக்கப்படுவதாக அரசாங்க நில அளவையாளர் நாயகம் பி.எம்.பி உதயகாந்த தெரிவித்துள்ளார்.

இந்தப் பணியில் பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், மதத்தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் மேற்கொண்டு தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

முதலில் இந்தத் தகவல்களை உள்ளடக்கியதாக டிஜிட்டல் வரைபடம் தயாரிக்கப்படும். அதனைத்தொடர்ந்து இது குறித்து பொதுமக்களின் கருத்துக்களும் கேட்டுக் கொள்ளப்படும் என்று நிலஅளவையாளர் நாயகம் தெரிவித்தார்.

புதிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடக்கப்படும் கிராமங்களின் பெயர், திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் ஏணைய வரைபடங்களுக்காகப் பயன்படுத்தமுடியும்.

இறுதி வரைபடம் தயாரிக்கப்பட்டு நிலஅளவையாளர் திணைக்களத்தில் சேர்க்கப்படுவதுடன் பின்னர் அதனை அச்சிட்டு பகிரங்கப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நில அளவையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (அ)


# கல்லூரிக்கு உதவி





வடமராட்சி, ஜன. 26

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் லண்டன் பழையமாணவர்கள், குறித்த பாடசாலைக்கு நிதி உதவியையும், போட்டோபிரதி இயந்திரத்தினையும் வழங்கியுள்ளனர். அத்துடன் ஒரு தொகை கொப்பிகளையும், வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு சப்பாத்துக்களையும் அவர்கள் வழங்கி வைத்தனர். கல்லூரி அதிபர் கனகலிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்ற நிகழ்விலேயே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (அ–11)



# வீட்டில் பதுக்கி இருந்த வாக்காளர் அட்டைகள்

முல்லைத்தீவு, ஜன.26

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் ஒரு தொகுதி வாக்காளர் அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.


நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கு விநியோகிக்கவேண்டிய ஒருதொகுதி வாக்காளர் அட்டைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

• குறித்த பகுதியில் பணிபுரியும் தபால் ஊழியர், வழக்கமாக கிராமவாசி ஒருவரிடமே கடிதங்களைக் கொடுத்து மக்களுக்கு விநியோகிப்பது வழக்கம். அதே போன்று, ஒருதொகுதி வாக்காளர் அட்டைகளையும் குறித்த தபால் ஊழியர், அந்த நபரிடம் கொடுத்து உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு கூறியுள்ளார்.

ஆனால் குறித்த நபர் அவற்றைத் தன் வீட்டில் கொண்டு சென்று வைத்துள்ளார்.

288 வாக்காளர் அட்டைகள் ஒரு வீட்டில் இருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில், பொலிஸார் தேர்தல் அலுவலக அதிகாரிகள் ஆகியோர் குறித்த பகுதிக்கு சென்று வாக்காளர் அட்டைகளை மீட்டனர். வாக்காளர் அட்டைகளை வைத்திருந்த நபரையும், தபால் ஊழியரையும் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்தனர். (அ)

# “மகிந்த அணியினர் ஐ.தே.க.வுக்கு தாவுவர்”



(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியை ஒன்றிணைப்பதற்காக -மஹிந்தவை ஒன்றிணைப்பதற்காக ஜனாதிபதி அப்போதிலிருந்தே தன் நிலையில் இறங்கி வந்தார். நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் மைத்திரிபால ஆறு பேரின் பெயர்களை குறிப்பிட்டு அவர்களை பிரதமராக நியமிப்பதற்குத் தயார் என்றும் மஹிந்த இதற்குத் தயாராகுமாரும் கூறி இருந்தார். மஹிந்த அதைக் கணக்கில் எடுக்கவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கதிரைக் சின்னத்தில் போட்டியுமாறு மஹிந்த அணியிடம் மைத்திரி கேட்டுக்கொண்டார். அதன் தலைவராக மஹிந்தவையே இருக்குமாறும் கூறினார். மஹிந்த எதையும் கணக்கில் எடுக்கவில்லை. ஆனால், அமைச்சுப் பதவிகளை கைவிட்டுவிட்டு வருமாறு மஹிந்த கூறி வருகின்றார்.

நாம் அமைச்சுப் பதவிகளை கைவிடுவதற்குத் தயார். ஆனால், மஹிந்த அணியினர் எம்முடன் இணைவதற்குத் தயாரா? மஹிந்த மைத்திரியை தலைவராக ஏற்பதற்குத் தயாரா? இது எதுவுமே இல்லாமல் நாம் எதற்காக அரசில் இருந்து வெளியேற வேண்டும்?

நாம் அரசில் இருப்பதால்தான் சுதந்திரக் கட்சிக்காரர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். அமைச்சுப் பதவிகளுக்காக நாம் இந்த அரசில் இருக்கவில்லை. கட்சியைப் பாதுகாப்பதற்காகவே அரசில் இருக்கின்றோம். வேறு ஒருவரின் அரசில் போய் நாம் இணையவில்லை. நாங்கள் உருவாக்கிய அரசில்தான் உள்ளோம்.

ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள் எங்களுக்குத் தேர்தல் மேடைகளில் ஏசும்போது அதைக் காரணம் காட்டி எங்களை அரசில் இருந்து விலகுமாறு மஹிந்த கூறுகின்றார். அவ்வாறு ஏச வைப்பதே மஹிந்த தரப்புதான்.

**கே:** மைத்திரிபாலவை ஜனாதிபதியாக்கியவர்கள் நாங்கள். மைத்திரிபால எங்களுக்கே சொந்தம். சுதந்திரக் கட்சிக்காரர்களுக்கு அவர் சொந்தமல்ல என்று ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள் கூறுகின்றனர். இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

**ப:** மைத்திரியால்தான் இவர்கள் இந்த இடத்துக்கு வந்திருக்கின்றனர் என்பதை ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள் உணர வேண்டும். மைத்திரி பொது வேட்பாளராக இறங்கி வாராவிட்டால் இன்று ஐக்கிய தேசிய கட்சிக்காரர்களால் அமைச்சர்களாகி இருக்க முடியாது. இன்னும் பல வருடங்களுக்கு எதிர்கட்சியிலேயே இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கும். இப்படியான ஒரு தலைவரை வெளியே தள்ளியமைக்கு மஹிந்தவும் பொறுப்புக் கூற வேண்டும்.

23 வருடங்களாக ஐக்கிய தேசிய கட்சியால் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியவில்லை. 2010 இல் சரத் போன்சேகாவையும் 2015 இல் மைத்திரிபாலவையும் இறக்குமதி செய்தே வேட்பாளராக நிறுத்தினர். இல்லாவிட்டால் இவர்களால் அரசு என்ற ஒன்றை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. மைத்திரியால்தான் இவர்கள் ஆட்சி அதிகாரங்களை அனுபவித்து வருகின்றனர். மைத்திரிக்கு உரிமை கோரி வரும் இவர்கள் 2015 தேர்தலில் ரணிலை வேட்பாளராக நிறுத்தி வெற்றி பெற்றிருக்கலாம் தானே.

ஐக்கிய தேசிய கட்சிக்கு தலைமைத்துவப் பிரச்சினை உண்டு. தற்போதைய தலைவருடன் பயணிப்பதில் ஐக்கிய தேசிய கட்சி ஆதவாளர்களுக்கு உடன்பாடு இல்லை. இதனால் அந்தக் கட்சியின் வாக்கு வீதம் குறைந்த 23 வரை காணப்பட்டது. இப்போதும் அதே நிலைதான்.

இவர்களால் நேராகச் சென்று ஆட்சியைப் பிடிக்கமுடியாது. எமது கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினையைப் பயன்படுத்தி குறுக்கு வழியில் சென்று ஆட்சியைப் பிடிப்பதற்கு சதி செய்கின்றனர். மைத்திரிபாலவை கட்சி சார்பற்ற ஜனாதிபதியாக வைத்துக்கொண்டு இவர்களுக்குத் தேவையான வகையில் அவரை ஆட்டுவதற்கே முயற்சி செய்தனர். அவர் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பதவியை ஏற்றதால், அது சரிவரவில்லை. இப்போது சுதந்திரக் கட்சிக்குள் பிளவை அதிகப்படுத்தி நினைத்ததை சாதிக்கப் பார்க்கின்றனர்.

' இருந்தாலும், உள்ளூராட்சி சபைகளில் இவர்களால் ஆட்சி அமைக்க முடியாது. சுதந்திரக் கட்சிக்காரர்கள் அனைவரும் மஹிந்தவின் பின்னால் சென்று வாக்குகளை வீணாக்காது ஒன்றிணைந்து நின்றால் நாம் ஆட்சி அமைப்பது நிச்சயம். சுதந்திரக் கட்சி 2020 இல் தனித்து ஆட்சி அமைக்க வேண்டுமென்றால் கட்சியைப் பலப்படுத்த வேண்டும் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற வேண்டும்.

கட்சியைப் பிளவுபடுத்தி ஐக்கிய தேசிய கட்சி தனி ஆட்சியை அமைக்கும் ரணில் - பஸில் இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இதுவெல்லாம் நடக்கின்றது. மைத்திரி தரப்பும் மஹிந்த தரப்பும் ஒன்றிணைந்தால் ஐக்கிய தேசிய கட்சியால் எழும்பவே முடியாது.

**கே:** இருந்தாலும், மஹிந்த அணியில் இருந்து ஒருவர்கூட ஐக்கிய தேசிய கட்சியின் பக்கம் சொல்லவில்லையே?

**ப:** கொஞ்சம் பொறுங்கள். செல்வார்கள். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதனால்தான் பெப்ரவரி 10 ஆம் திகதிக்குப் பின் தனி ஆட்சி அமைப்போம் என்று ஐக்கிய தேசிய கட்சிக்காரர்கள் கூறுகின்றனர். இப்போது மஹிந்த தரப்பினர் சும்மா ஐக்கிய தேசிய கட்சிக்கு ஏசி ஏசித் திரிகின்றனர். இறுதியில் அந்தக் கட்சியில் போய் இணைந்துகொள்வர். இந்தச் சதிக்குள் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் சிக்குவதா இல்லையா என்று முடிவெடுக்க வேண்டும். -என்றார்.

■ காவியன்

## இறுக்கி முறுக்கினால் மேலை போறது கட்டாயம்

இப்ப கொஞ்ச நாளா ஆக்கள் அடிபட்டுச் சாகிறது கூடிப் போச்சு. 2018 தொடங்கின அண்டே எத்தினைபேர் செத்தவை தெரியுந்தானே? உப்பிடித்தான் கொழும்பிலை முந்த நாள் இரயில் ஏறப்போனவை தாயும், மேனும். அதிலை ஏறேக்கை விழுந்தாம் தாய் செத்துப்போனா, மேன் மட்டும் உயிர் தப்பினவர். அதுக்குப் பிறகு புங்குடுதீவிலை பள்ளிக் குடத்துக்குப் போய் வரேக்கை, நேவியின்ரை .பவள் அடிச்சுப் பிள்ளை உடனை சரி. அந்த மோட்டச் சைக்கிளை ஓடிக் கொண்டு போனவர் ஆஸ்பத்திரியிலை. உது தான் இப்பத்தை நிலமை.

புங்குடுதீவிலை நேவி அடிச்சாப்பிறகு பெரிய பிரச்சினை நடந்து சனம் ஆர்ப்பாட்டம் நடத்தினவை. ஆமி, நேவி, பொலிஸ் எண்டு அவையின்ரை வாகனத்தாலை அடிபட்டுச் செத்த சனம் கனக்க. அவைக்குச் சனத்தை அடிச்சுச் சாக்காட்டுற விசியம் சாதாரணமாப் போச்சுது. சனம் சாகிறதைப் பற்றி அவைக்கு அக்கறை இல்லை. உப்பிடி முந்தி ஒருக்கா கொழும்புக்குப் போற வழியிலை ஒரு பள்ளிக்கூடத்துக்குப் போற பிள்ளை ஒண்டை கொழும்பு பிறைவேற் பஸ் அடிச்சாப்போலை அந்த இடத்துக்குரிய சனம் எல்லாம் ஒண்டு சேந்து போற அத்தனை பஸ்ஸுக்கும் இரவு பகலா கல் எறிஞ்சு ஒரு பஸ்ஸையும் ஒரு கிழமையாப் போகாமல் பண்ணீட்டினம். பஸ்காரர் எல்லாம் பயந்து, பயந்து வேறை வழியிலைதான் போனவை. பிறகு ஆரோ தலையிட்டுச் சமரசம் செய்துதான் சனம் ஓமெண்டு பஸ்ஸைப் போகவிட்டவை. அந்த விசியத்திலை செத்த பிள்ளை சிங்களப் பிள்ளை எண்டபடியால் கவுண்மென்றாலையும் ஒண்டும் செய்யாமல் போச்சுது. இப்ப புங்குடுதீவிலை செத்த பிள்ளை தமிழ் பிள்ளை அடிச்சது நேவியின்ரை வாகனம். நீதி என்ன மாதிரி இருக்கும் எண்டு கொஞ்சம் ஜோசிச்சுப்பாருங்கோ. சரியான நீதி கிடைக்குமோ? இந்த விசியத்திலை அரசாங்கம் என்ன செய்யும் எண்டும் ஜோசிச்சுப் பாருங்கோவன்.

மழைகாலத்திலை திரியிற அட்டை, செட்டிஅட்டை மாதிரி வாகனங்கள் றோட்டிலை குறுக்கு மறுக்காத் திரியினம். ஒருத்தருக்கும் நீதியா வாகனம் ஓடத்தெரியாது. அரைகுறையாப் படிச்சுப் பாஸ் பண்ணிப் போட்டு லைசன்ஸ் எடுத்தவைதான் கனபேர் இப்ப வாகனம் எடுத்திருக்கினம். காலுக்கை வாகனத்தை எடுத்து வைச்சால் கண்விண் தெரியாமல் ஓடித்திரியினம். அடிபட்டுச் சாகிறதைப் பாத்தால் கண்கொண்டு பாக்கேலாமல் கிடக்கு. சண்டையிலை செத்ததைப் போலை இப்ப வாகனத்தாலையும் சாகினம்.

லட்சக் கணக்காக் காசைக் குடுத்து வாகனத்தை வேண்டி ஓடி அடிபட்டுச் சாகிறதெண்ணிற விசியத்தை நினைக்க மனசுக்குக் கஷ்டமாக் கிடக்கு. கொஞ்சமாவது மற்றவையளைப் பற்றி அக்கறைப் படுகிறவை வாகனம் ஓட்டுறதிலையும் கவனமா இருப்பினம்.

எப்பிடியும் நாங்கள் சொல்லிச் சனம் திருந்தப்போறதில்லை. பட்டுத்தான் தாங்கள் தெளிவினம் எண்டு பந்தயம் கட்டிக்கொண்டு திரியினம். தடியைக் குடுத்து அடியை வாங்கிறதெண்ணிறது உதைத்தான்.

முதலி தன்ரை கான்போனிலை உப்பிடிச் சாகிறவையின்ரை படத்தைக் காட்டினவன். கண்கொண்டு பாக்கேலாது. இரயிலுக்கை பாஞ்ச ஒரு பெடியின்ரை படத்தைக் காட்டினவன். சைக்கிளைக் கழிவிப் பூட்டக் குடுத்தால் எப்பிடி பாட்ஸ் பாட்ஸாக் கழட்டி வைச்சிருக்கினமோ, அப்பிடித் தலை துண்டாப்போய்க் கிடக்கு. பாக்க என்ன கஷ்டமாக்கிடக்கு எண்டு தெரியுமே? முதலீட்டைச் சொல்லிப் போட்டன் இனிமேல் உப்பிடியானதை எனக்குக் காட்டாதையெடா எண்டு. கனவிலையும் உந்தக் கோதாரிதான் கண்ணுக்கை வருகிது. இராத்திரிப் படுக்கப்போய் ஒரு கண் மூடினால் நித்திரை வரும்வரை உதுதான் நினைப்பாக் கிடக்கும்.

ஆனபடியால் எல்லாரிட்டையும் சொல்லுங்கோ. றோட்டிலை இறங்கினால் கவனமாத்திரிய வேணும். என்ன விளங்குதோ? முறுக்கினால் ஓடுதெண்டால்போலை இறுக்கி முறுக்கக்கூடாது. சொல்லுக் கேளாட்டி நீங்கள் எங்கைபோவியளோ தெரியாது. சொல்லுறதைக் கேளுங்கோ.

**வில்லங்கம் விநாசி**

## ஊழலை எதிர்த்து தொடர்ந்தும் போராடுவேன்

### மைத்திரி உறுதி

கொழும்பு, ஜன.26

“சிறந்த தேசத்தையும், ஒழுக்கம் பேணும் அரசியல் கலாசாரத்தையும் உருவாக்கும் நோக்கத்துடன் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போகின்றேன்” என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



அடுத்த மாதம் பத்தாம் திகதிக்குப் பின்னர் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக பொலனறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

“கறை படிந்த அரசியல் காரணமாகவே இலங்கையை அபிவிருத்தி கண்ட நாடுகளின் மட்டத்துக்கு கொண்டு வர முடியாதுள்ளது. இதன் காரணமாக தூய்மையான அரசியல் நடவடிக்கைகளை ஏற்படுத்த தமது பதவிக் காலம் முழுவதும் பாடுபடப் போகின்றேன்” என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

## தபால் மூல வாக்குகள் எப்போது எண்ணப்படும்?

கொழும்பு, ஜன.26

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூல வாக்குகள் பெப்ரவரி 10ஆம் திகதி வாக்குப்பதிவுகள் நிறைவுபெற்ற பின்னரே எண்ணப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

புள்ளடி இடப்பட்ட தபால்மூல வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய பொதிகள் பெப்ரவரி 9ஆம் திகதி சிரேஷ்ட தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும். இருந்தபோதிலும், பெப்ரவரி 10ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு வாக்குப்பதிவு பூர்த்தியான பின்னரே பொதிகள் திறக்கப்பட்டு எண்ணப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். (அ)

## ஊர்வலங்களுக்குத் தடை

கொழும்பு, ஜன.26

உள்ளூராட்சித் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சமகாலத்தில் ஊர்வலங்களுக்கு அனுமதி இல்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

“வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யும் முதல் நாள் தொடக்கம் தேர்தல் வாக்குப்பதிவு நிறைவுபெற்று, மறுநாள் வரை சமய ஊர்வலங்களை நடத்துவதற்கு மாத்திரமே அனுமதி உள்ளது” என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஐ-றோட் திட்டத்துக்கு உதவுமாறு அரசிடம் கேட்டார் முதலமைச்சர்



யாழ்ப்பாணம், ஜன. 26

வடக்கு மாகாணத்தில்ஐ-றோட் திட்டத்துக்குள் அடங்கும் வீதிகளைச் செப்பனிட நிதியுதவி வழங்குமாறு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட போவதாக அறிவிக்கப்பட்ட ஐ-றோட் திட்டம் நடைமுறைப்படுத்தாது பின்னடிக்கப்படுவதால் அந்தத் திட்டத்துக்குள் அடங்கும் வீதிகளைச் செப்பனிட மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென உறுப்பினர் பரஞ்சோதி நேற்றைய அமர்வில் பிரேரணை கொண்டு வந்தார்.

இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்ட வீதிகள் தற்போதும் பழுதடைந்து போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுவதாகப் பொது மக்கள் எம்மிடம் தொடர்ச்சியான முறைப்பாடுகளைச் செய்து வருவதால் இதற்கு வேறு நிதி மூலங்களைப் பெற்று வீதிகளைச் செப்பனிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் கோரினார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், மேற்படி திட்டம் தாமதிக்கப்படுவதால் அந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட வீதிகளைச் செப்பனிட நிதியுதவி செய்யுமாறு தேசிய நல்லிணக்க செயலணிக்குப் பொறுப்பாக உள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளேன் -என்றார். (ச)

# கேலிச்சித்திரம்






## மூதாட்டி கொலை மூவருக்கு மறியல்

யாழ்ப்பானம், ஜன. 26

ஆனைக்கோட்டை -பொன்னையா வீதியில் தனியாக இருந்த 72 வயது மூதாட்டி அடித்துக்கொலை செய்யப்பட்டது தொடர்பில் கைதான நால்வரில் மூவர் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேக நபர் ஒருவர் ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. ஜெகநாதன் சத்தியபாமா (வயது 72) என்ற மூதாட்டியே தலையில் அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். (ச)

# தொடர்ச்சிகள்

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டார் முதலமைச்சர் நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபையின் 116 ஆவது நேற்று நடந்தது. இதன்போது வடக்கு முதலமைச்சர் அரச அதிபருக்கு எழுதிய கடிதம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், முந்திய அரசு மாகாணத்தில் தாம் நினைத்தவற்றையே செய்து வருகின்றது. இங்கு என்ன செய்யப்படுகின்றது என்று எமக்குத் தெரியாத நிலையில் தான், அவ்வாறு என்ன செய்யப்பட்டது, செய்யப்படுகிறது என்று மத்திய அரசின் முகவராக உள்ள அரச அதிபரிடம் கோரியிருந்தேன். யார் மீதும் தனிப்பட்ட கோபம் எதுவும் எமக்கில்லை. அரசின் முகவராகச் செயற்படுகின்றபோது அதனை எம்முடன் கலந்து பேசிச் செய்யவேண்டும்.

இதனையே நாம் மத்திக்கும் பல தடவைகள் தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

இங்கு அரசு முன்னெடுக்கும் திட்டங்கள் பலவும் உள்நோக்கங்கள் கொண்டதாகவே காணப்படுகின்றன. ஆகையினால் அரசின் உள்நோக்கங்களை அவர்களும் புரிந்து கொள்ளவேண்டும். அதனை எமக்குத் தெரியப்படுத்தினாலே தான் நாமும் என்ன நடக்கின்றதென்பதை அறிந்து கொள்ள முடியும்.

ஆகவே மத்திய அரசு இனிமேலும் தாம் நினைத்தவாறோ அல்லது உள்நோக்கத்துடனோ செயற்படாது எமக்கும் தெரியப்படுத்தி எம்முடன் கலந்து பேசி செயற்படவேண்டும்-என்றார். (ச)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் தொடர்பில் இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சிறப்புரையாற்றவுள்ளார்.

நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பரந்தன் பொதுச் சந்தை வளாகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராசா தலைமை தாங்கவுள்ளார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர். சி.சிறீதரன் உட்பட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து உரையாற்றவுள்ளனர். (ச)

## சிங்களக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்றது.

முல்லைத்தீவில் கிவுல் வலயம் என்ற பெயரில் சிங்களக் குடியேற்றம் இடம்பெற்று வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் என முல்லைத்தீவைச் சேர்ந்த உறுப்பினர் துரைராசா ரவிகரன் கவனயீர்ப்பு பிரேரணையை சபையில் கொண்டு வந்தார். இது தொடர்பில் அவரும் ஏனைய உறுப்பினர்களும் முன்வைத்த கருத்துக்கள் வருமாறு:

### து.ரவிகரன்

வடக்கில் பல இடங்களில் திட்டமிட்ட காணி ஆக்கிரமிப்புக்கள், சிங்கள குடியேற்றங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அதிகளவில் இடம்பெறுகின்றன. இந்நிலையில் கிவுல் ஓயா திட்டம் என்ற போர்வையில் புதிய திட்டம் கொண்டு வரப்பட்டு தமிழரின் பாரம்பரிய இடங்கள் அபகரிக்கப்பட்டு சிங்கள பெயர்கள் சூட்டப்படவுள்ளன.

கிவுல் ஓயா திட்டமானது இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகாவலி அமைச்சராக இருந்தபோதே அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது மிக விரைவாக அது நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றால் எல்லோரும் இணைந்து திட்டமிட்டே இதனை செயற்படுத்துகின்றனர் என்பதே வெளிப்படை. சிங்கள மயமாக்கலை வேடிக்கை பார்த்து எம்மை மீண்டும் ஆயுதத்தை தூக்க வைக்கும் நிலைக்கு தள்ளாதீர்கள்.

### ச.சுகிர்தன்

முல்லைத்தீவில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள், ஆக்கிரமிப்புக்கள் குறித்து மாகாண சபை ஆரம்பித்த காலம் தொடக்கம் ரவிகரன் ஆதாரத்துடன் முன்வைத்து வருகிறார்.

இத்தகைய குடியேற்றங்கள் - ஆக்கிரமிப்புக்களை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். ஆனால் இதற்கு, மாகாண சபை இதுவரை எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை என்ன? இனியாவது இதனைத் தடுத்து நிறுத்த மாகாண காணி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

### ஜி.ரி. லிங்கநாதன்

இலங்கையில் சிங்களக் குடியேற்றங்களும் ஆக்கிரமிப்புக்களும் இன்று நேற்று நடக்கவில்லை. காலம் காலமாகவே நடைபெற்று வருகின்றது. ஆனால் புலிகள் பலமாக இருந்த காலத்தில் இல்லாமல் இருந்த இக் குடியேற்றங்கள் ஆக்கிரமிப்புக்கள் என்பன தற்பொது மீளவும் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை அனைத்தும் திட்டமிட்டே மேற்கொள்ளப்படுகின்றன. ஆட்சியில் இருக்கும் நாம் இங்கு பல தடவைகள் பேசியிருக்கின்றோம். ஆனால் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தொடர்பாக அப்பகுதிகளில் - குறிப்பாக வன்னியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்கவோ, தடுத்து நிறுத்தவோ நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை.

### வை. தவநாதன்

எமது மக்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். ஒரு புறம் வாழ்வாதாரம் மறுபுறும் இருப்பே கேள்விக்குறியாகிறது. அந்தளவிற்கு குடியேற்றங்களும் ஆக்கிரமிப்புக்களும் நடக்கின்றன. ஆனால் இதனைத் தடுத்து நிறுத்த வேண்டியவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றனர்.

அதிலும் தமிழ் மக்களின் பிரதிநிதியாக எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் இருக்கின்றார். அவர் வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்திப்பதற்கு மட்டும் பெயரளவிலேயே இருக்கின்றார். எதிர்க்கட்சி தலைவராக இருந்தாலும் ஆளுங்கட்சியாகவே செயற்பட்டு வருகின்றார். மேலும் வெளிவந்திருக்கின்ற இடைக்கால அறிக்கையை வைத்துக் கொண்டு மாயாஜாலம் நடைபெறப் போவது போன்று கூறுகின்றார். இவ்வாறான நிலையில் தான் எமது மக்கள் வாழ் விடங்களுக்காக போராடிக் கொண்டிருக்கின்றனர்.

### எம்.கே. சிவாஜிலிங்கம்

தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் அபகரிக்கப்பட்டு குடியேற்றங்கள் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் மாகாண சபைக்குத் தெரியாமல் மத்திய அரசு திட்டமிட்ட வகையில் மேற்கொள்கின்றது.

மத்திய அரசாங்கம் உருவாக்கியுள்ள மீள்குடியேற்றச் செயலணியின் செயற்பாடுகள் மிக மோசமானவை. அந்தச் செயலணி சிங்கள, முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றுவதாகவே இருக்கிறது. ஆகவேதான் தமிழ் மக்களையும் அதேபோன்று அவர்களது சொந்த நிலங்களில் குடியேற்றுமாறு கேட்கின்றோம். (ச)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் இமானுவேல் ஆனொல்ட் கடந்த டிசெம்பர் மாதம் பதவி விலகியிருந்தார்.

அவரின் இடத்துக்கு தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்ட சபாரத்தினம் குகதாஸின் பெயரை கட்சி செயலாளர் பரிந்துரைத்தார். இந்த அடிப் படையில் சபாரத்தினம் குகதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று வட மாகாண சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் பதவி விலகியிருந்தார். அவரது இடத்துக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸால் அப்துல் நியாஸ் சீனி முஹமட்டின் பெயர் பரிந்துரைக்கப்படடு, வடக்கு மாகாண சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

## மாணவியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலற்ற தன்மையே காரணம் எனவும் குறித்த வைத்தியசாலை வடக்கு மாகாண சபைக்குட்பட்ட வைத்தியசாலையாக இருப்பதனால் இந்த மாணவியின் மரணத்திற்கு வடக்கு மாகாண சபையே பொறுப்புக் கூறவேண்டும். ஆனால் அவர்களது அசமந்தமான போக்கே இந்த மரணத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது. நாம் அதிகாரத்திலிருந்தபோது அவ்வாறான ஒரு நிலைமை உருவாக இடமளித்திருக்கவில்லை.

வைத்தியசாலையானாலும் சரி ஏனைய திணைக்களங்களானாலும் சரி அந்தந்த இடங்களுக்குத் தேவையான ஆளணிகளையும் பௌதீக வளங்களையும் நாம் உடனுக்குடன் நிறைவுசெய்து கொடுத்திருந்தோம். அந்தவகையில் குறித்த மாணவியின் மரணத்திற்கு வடக்கு மாகாணசபை பொறுப்புக் கூறவேண்டும்" என டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## கோத்தா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதில் இருந்து தப்புவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றில் கோத்தபாய தடை உத்தரவு வாங்கியிருந்தார். இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது வரும் பெப்ரவரி 15 ஆம் திகதி வரை கோத்தபாயவை கைது செய்யத் தடை விதித்தது மேன்முறையீட்டு நீதிமன்றம். இந்த வழக்கு வரும் பெப்ரவரி 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (ச)

## வர்த்தக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன. உணவுக் கூடங்கள், அழகுக் கலை நிலையங்கள், பொழுதுபோக்கு மையங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், உடைகள் மற்றும் நகை சார் நிறுவனங்கள், நிதிசேவைகள் மோட்டார் நிறுவனங்கள் எனப் பல நிறுவனங்கள் இதில் பங்கேற்கின்றன. (ச)

## கடற்படைக்கு...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

25 குடும்பங்களை சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை, இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கடற்படையினரும், புலனாய்வாளர்களும் அச்சுறுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

போராட்டத்துக்கு வந்திருந்தவர்களின் விவரங்களைக் கேட்டறிந்தனர் என்றும், மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களைப் பதிவு செய்துகொண்டு சென்றனர் எனவும் மக்கள் மேலும் குறிப்பிட்டனர். (ச)

# மிலனில் புரண்டது ரயில்




மிலன், ஜன. 26

இத்தாலி தலைநகர் மிலன் அருகே புறநகர் மின்சார ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் இரண்டு பயணிகள் உயிரிழந்தனர்.

ஐரோப்பிய நாடான இத்தாலித் தலைநகர் மிலனிலிருந்து வடக்கு இத்தாலியில் உள்ள க்ரீமோனாப் பகுதிக்குச் சென்றபயணிகள் மின்சார ரயில், நேற்றுக் காலை தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இந்த விபத்துக் குறித்து தகவலறிந்து வந்த மீட்புக்குழுவினர் பயணிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் இரண்டு பயணிகள் பலியாகியுள்ளனர் எனவும், பலர் காயமடைந்துள்ளனர் எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. (ஐ)



# "எத்தடை வரினும் எதிர்ப்பேன்"

சென்னை, ஜன. 26

"எனது அரசியல் பயணத்தில் தடையாக எது வந்தாலும், யாரை வேண்டுமானாலும் எதிர்த்து அரசியல் செய்வேன்" என்று கூறியுள்ளார் நடிகர் கமல்ஹாசன்.

நடிகர் கமல்ஹாசன் சென்னை விமான நிலையத்தில் நேற்று பேட்டி அளித்தார்.

அதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:

நான் மக்களை சந்திக்கும் சுற்றுப் பயணத்துக்கு ஒரு பெயர் வேண்டும் என்று கேட்டார்கள். அப்போது எனக்கு முதலில் யோசிக்காமல் வந்த பெயர் 'நாளை நமதே' என்பதுதான். அது எம்.ஜி.ஆர். படத் தலைப்பு என்கிறார்கள். அதில் என்ன தவறு உள்ளது? அவருக்கும் இந்தக் கனவு இருந்தது. நல்ல ஞாபகங்கள்தான் வருகிறது இதைச் சொல்லும்போது. அதனால்தான் இந்தப் பெயர்.

முதலில் எங்கள் கட்சியைப் பதிவு செய்ய வேண்டும். அது பெப்ரவரி 21ஆம் திகதி தான் நடக்கும். அதன் பிறகு எங்களுக்குள் இருக்கும் கூட்டமைப்பில் பேசித்தான் முடிவு செய்ய முடியும். அதுகுறித்து இப்போது நான் எதுவும் சொல்ல முடியாது. அது தனிமனித முடிவாகும்.

எனது அரசியல் பயணம், தேசிய, தமிழக அரசியலை நோக்கி இருக்கும். ஆனால் தமிழகம்தான் முக்கியம். எனது வீட்டை முதலில் சுத்தப்படுத்த வேண்டும். என் வீட்டு வேலைக்காரனாக இருப்பதுதான் முதலில் எனக்கு பெருமை.

ரஜினியின் அரசியலும் எனது அரசியவும் ஒரே திசையில்தான் செல்லும். மக்களின் சேவை என்பது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி சொல்வார்கள். அதற்கு எனக்கு ஒப்புதல் உண்டா? எங்களுடைய கடமைகளுக்கு கோட்பாடுகளுக்கு இடையூறு இல்லாமல் இருக்குமா என்பதை கண்டிப்பாக கவனித்தே ஆக வேண்டும்.

அரசியலில் யாரை வேண்டுமானாலும் எதிர்ப்போம். கட்டுவதுதான் எங்கள் வேலை. இடிப்பது அல்ல." என்றார். (ஐ)

# ஒரே இரவில் தயாரான சீன ரயில் நிலையம்



பீஜிங், ஜன. 26

சீனாவின் புஜியான் மாகாணத்தில் உள்ள முக்கிய ரயில் தடத்தில் 1,500 தொழிலாளர்களைக் கொண்டு ஒரே இரவில் புதிய ரயில் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தெளிவான திட்டம், அசாத்திய வேகம் ஆகியவற்றால் சீனா எந்தச் சவால்களையும் முறியடித்துவிடுகிறது. அவர்களின் உழைப்புக்கு எடுத்துக்காட்டாக எத்தனையோ திட்டங்களைக் கூறினாலும், சமீபத்தில் ஒரே இரவில் ஒரு ரயில் நிலையத்தையே முழுவதுமாக கட்டமைத்துள்ளது.

புஜியான் மாகாணத்தில் உள்ள லோங்யான் நகரில்தான் இந்த ரயில் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. முக்கிய நகரங்களை இணைக்கும் வழித்தடத்தில் புதிதாக ரயில் நிலையம் அமைக்கத் தேவைப்பட்டதால், கடந்த வாரம் ஓர் இரவில் பணிகள்தொடங்கப்பட்டு மறுநாள் காலை முடிக்கப்பட்டுள்ளன. 9 மணி நேரத்துக் குறைவான நேரத்தில் பணிகள் முடிக்கப்பட்டன. (ஐ)

# பாடசாலையில் துப்பாக்கிச் சூடு

அமெரிக்கப் பாடசாலை ஒன்றில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் கென்டக்கி மாகாணம் பென்டோன் நகரில் மார்ஷல் என்கிற இடத்தில் உயர்நிலை பாடசாலை ஒன்று உள்ளது.

நேற்று முன்தினம் இந்தப் பாடசாலையில் வழக்கம் போல் வகுப்புகள் நடந்து கொண்டிருந்தபோது அங்கு கல்வி கற்கும் 15 வயது மாணவன் ஒருவன் கைத் துப்பாக்கியுடன் வந்து, தன் எதிரே நின்ற அனைவரையும் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டான். இதனால் பீதியடைந்த மாணவர்கள் அலறி அடித்தபடி நாலாபுறமும் ஓட்டம் பிடித்தனர்.

இருப்பினும் அவன் சுட்டதில் 14 மாணவர்களின் உடலில் குண்டு பாய்ந்தது. அவர்களில் 15 வயதான மாணவி சம்பவ இடத்திலேயே இறந்தாள்.

படுகாயம் அடைந்த 13 பேரும் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலன் இன்றி 15 வயது மாணவன் ஒருவன் பரிதாபமாக இறந்தான்.

முன்னதாக துப்பாக்கிச்சூடு நடந்தவேளை உயிர் பிழைப்பதற்காக ஓடியபோது தவறி விழுந்ததில் 5 மாணவர்கள் காயமடைந்தனர். அவர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையே துப்பாக்கிச்சூடு நடத்திய மாணவனை பொலிஸார் கைது செய்தனர். அவன் மீது கொலை மற்றும் கொலை முயற்சி வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. (ஐ)

# பெண்ணியவாதிக்கு கூகுள் கொடுத்த மரியாதை



புதுடில்லி, ஜன. 26

உலகின் சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவரான பெண்ணியவாதி அடிலைன் வெர்ஜீனியா ஸ்டீபனின் 136ஆவது பிறந்தநாளை இணையத்தளத் தேடுபொறியான கூகுள் சிறப்பு டூடுல் மூலம் நேற்றுக் கொண்டாடியது.

இருபதாம் நூற்றாண்டின் முன்னணி நவீன இலக்கியவாதிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் வெர்ஜீனியா வூல்ப். இவர் 1882ஆம் ஆண்டு 25ஆம் திகதி இங்கிலாந்தில் உள்ள கென்சிங்டன் நகரத்தில் வளமான ஒரு குடும்பத்தில் பிறந்தார்.

அவரது குழந்தைப் பருவத்தில் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே கற்கும் நிலை ஏற்பட்டது. பெரும்பாலும் ஆங்கில செவ்விலக்கியங்கள் மற்றும் விக்டோரியன் இலக்கியங்கள் ஆகியவற்றைக் கற்றார். வெர்ஜீனியா வூல்ப் 1900ஆம் ஆண்டிலிருந்து தொழில் ரீதியாகத் தனது எழுத்துப்பணியைத் தொடங்கினார். பெண்ணியம் சார்ந்த கருத்துக்களையும் கட்டுரைகளாக இவர் வெளியிட்டார்.

தன் வாழ்நாளில் அனுபவித்த, உணர நேர்ந்த கருத்துக்களை மற்றவர்கள் பயன் பெற வேண்டும் என்ற நோக்கில் எழுதிக் கொண்டே இருந்த வூல்ப் 1941ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் திகதி தனது 59 வயதில் மறைந்தார்.

அவரைப் போற்றும் வகையில் அவரது 136ஆவது பிறந்தநாளான நேற்று அவரது புகைப்படம் கொண்ட 'டூடுல்' மூலம் 'கூகுள்' கொண்டாடி மகிழ்ந்தது. (ஐ)

# 100 நாட்களைத் தொட்ட 'மெர்சல்'

சென்னை, ஜன. 26

விஜய் நடிப்பில் வெளியான 'மெர்சல்' படம் திரையரங்குகளில் 100 நாட்களைக் கடந்து புதிய மைல்கல்லைத் தொட்டுள்ளது.

அட்லி இயக்கிய இந்தப் படம் பல்வேறு தடைகளைத் தாண்டி திரைக்கு வந்தது. இந்தப் படத்தின் வசூல் சுமார் ரூ. 200 கோடியைத் தாண்டியதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. தெலுங்கில் 'அதிரிந்தி' என்ற பெயரிலும் 'மெர்சல்' படம் வெளியானது. அங்கும் வசூலில் சாதனை படைத்தது.

இந்நிலையில், நேற்றையதினம் 'மெர்சல்' 100 நாட்களைத் தாண்டியுள்ளது. (ஐ)

# வெளிவராத 'பத்மாவத்'




ராஜஸ்தான், ஜன. 26

'பத்மாவத்' திரைப்படத்துக்குு் எதிராக வட மாநிலங்களில் நடைபெற்ற போராட்டங்களில் வன்முறை வெடித்தது. 200இற்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. 1,900 பெண்கள் தீக்குளிக்கத் தயாராக இருப்பதாக கர்னி சேனா மிரட்டல் விடுத்தது.

இதனால், ராஜஸ்தான் மாநிலத்தில் நேற்று முக்கியமான வீதிகள் மறிக்கப்பட்டன. கடைகள் சூறையாடப்பட்டன. கர்னி சேனாவினர் மோட்டார் சைக்கிள் பேரணியும் நடத்தி உள்ளனர். போராட்டம் மற்றும் வன்முறை காரணமாக அந்த மாநிலத்தில் படத்தை திரையிட மாட்டோம் என ஏற்கனவே திரையரங்க உரிமையாளர்கள் கூறியிருந்தனர். நேற்றும் மோசமான சூழ்நிலை நிலவியதால் படம் திரையிடப்படவில்லை.

பாதுகாப்பு மிகவும் முக்கியமானது எனக் கூறிய திரையரங்க உரிமையாளர்கள் படத்தைத் திரையிடவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். (ஐ)




# புரட்டி எடுத்து இறுதியில்

டாக்கா, ஜன. 26

பங்களாதேஷுக்கு எதிராக நேற்று டாக்காவில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் இலங்கை அணி அபார வெற்றிபெற்று, இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

பங்களாதேஷில் நடைபெற்று வரும் முத்தரப்புத் தொடரில் இலங்கை, பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகள் பங்கேற்ற வருகின்றன.

இதில், பங்களாதேஷ் அணி ஏற்கனவே இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ள நிலையில், இரண்டாவது அணி எது என்பதைத் தீர்மானிப்பதற்கான முக்கிய போட்டி நேற்று நடைபெற்றது.

இதில், பங்களாதேஷ் அணியுடன் இலங்கை அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியை, இலங்கைப் பந்துவீச்சாளர்கள் புரட்டி எடுத்தனர்.

இதனால் அந்த அணி, 24 ஓவர்களில் 82 ஓட்டங்களுள் சுருண்டது.

பங்களாதேஷ் அணி சார்பாக முஷ்பிகுர் ரஹ்மான் (26), சப்பிர் ரஹ்மான் (10) ஆகியோர் தவிர வேறு எவரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையைத் தொடவில்லை.

இலங்கையின் பந்தவீச்சில் கலக்கிய லக்மல் 3 விக்கெட்டுகளையும், சமீரா, திசார பெரேரா மற்றும் சன்டகன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைச் சாய்த்தனர்.

பின்னர் 83 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணி, குணதிலக (35), தரங்க (39) ஆகியோரின் அதிரடியால், 11.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 83 ஓட்டங்களைச் சேர்த்து 10 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றி மூலம் அந்த அணி, இறுதிப் போட்டிக்கும் தகுதிபெற்றது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக லக்மல் தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை - பங்களாதேஷ் மோதும் இறுதியாட்டம் நாளை காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

# காலிறுதியில் பாகிஸ்தான்

இளையோர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடந்த காலிறுதியாட்டத்தில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

நேற்றுமுன்தினம் நடந்த 2ஆவது காலிறுதியாட்டத்தில் பாகிஸ்தான்-தென்னாபிரிக்க அணிகள் மோதின.

முதலில் ஆடிய தென்னாபிரிக்க, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 189 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் ஆடிய பாகிஸ்தான் அணி 47.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ஓட்டங்கள் சேர்த்து 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (ஐ)



# பதிலடி!



அக்லாந்து, ஜன. 26

நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது இருபது-20 கிரிக்கெட் போட்டியில் பகர் சமான், பாபர் ஆசம் ஆகியோரின் அபார அரைச்சதங்கள் கைகொடுக்க 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது.

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2ஆவது இருபது-20 கிரிக்கெட் போட்டி அக்லாந்தில் நேற்று நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் பகர் சமான், பாபர் ஆசம் ஆகியோரின் அரைச்சதங்களுடன் (50), அஹ்மட் ஷெஹ்சாட் (44), சர்பிராஸ் அஹ்மட் (41) ஆகியோரின் அசத்தலான ஆட்டமும் கைகொடுக்க, பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 201 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் 202 என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய நியூசிலாந்து அணி, பாகிஸ்தானின் பந்துவீச்சுத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் 18.3 ஓவர்களில் 153 ஓட்டங்களுள் சுருண்டது.

இதனால், பாகிஸ்தான் அணி, 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட தொடரை 1:1 என்ற கணக்கில் சமநிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

இன்னும் ஒரு போட்டி மிகுதி உள்ளது. (ஐ)

# நாளை இறுதியில் மோதல்

மெல்பேர்ண், ஜன. 26

அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிக்கு, ஆண்கள் பிரிவில் குரோஷியாவின் சிலிச், பெண்கள் பிரிவில் ஹலெப் மற்றும் வொஸ்னியாக்கி ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டம் ஒன்றில் உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான கரோலின் வொஸ்னியாக்கி (டென்மார்க்)-மெர்டனிஸ் (பெல்ஜியம்) ஆகியோர் மோதினார்கள்.

இதில் வொஸ்னியாக்கி 6-3, 7-6, என்ற சுற்றுக் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றார். அவர் முதல் முறையாக அவுஸ்ரேலிய ஓபன் இறுதிப்போட்டிக்கு முன்னேறி இருக்கிறார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் முதல் நிலை வீராங்கனையான சிமோனா ஹலெப் (ருமேனியா) 21ஆம் நிலை வீராங்கனையான கெர்பரை எதிர்கொண்டார். முதல் சுற்றை 6-3 என்ற புள்ளிக் கணக்கில் கைப்பற்றிய ஹலெப் 2ஆவது சுற்றை 4-6 என்ற புள்ளிக் கணக்கில் இழந்தார்.

பின்னர் வெற்றியைத் தீர்மானிக்கும் 3ஆவது சுற்றில் இருவரும் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இதனால் இந்தச் சுற்று நீண்டு கொண்டே சென்றது. இறுதியில் ஹலெப் 9-7 என்ற கணக்கில் 3ஆவது சுற்றைக் கைப்பற்றி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இறுதி போட்டியில் 2ஆம் இடத்தில் இருக்கும் கரோலின் வொஸ்னியாக்கியுடன் முதல் நிலை வீராங்கனையான ஹலெப் நாளை பலப்பரீட்சை நடத்தவுள்ளார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற அரையிறுதியாட்டம் ஒன்றில், சிலிச் (குரோஷியா) -எட்மண்ட் (இங்கிலாந்து) ஆகியோர் மோதினர்.

இந்த ஆட்டத்தில் சிலிச் 6-2, 7-6, 6-2 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

மற்றொரு அரையிறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து)-ஹியான் சங் (தென்கொரியா) ஆகியோர் மோதவுள்ளனர். இதில் வெற்றிபெறுபவர், நாளைமறுதினம் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் சிலிச்சுடன் மோதுவார். (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.